| Class | 371.422 |
|---|---|
| No | M19 |

# இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் விளைதிறனை மேம்படுத்தல்

(கோறளைப்பற்று மேற்கு கோட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு)

OUSL Library.
Donated by.
Dr. W. M. S.
Wanasinghe

மு.த. மஸாஹிரா

பதிவிலக்கம் : 213276410

கல்வியாண்டு : 2013/ 2014

OPEN UNIVERSITY
74476

முது கல்விமாணி கற்கை நெறி

இடைநிலை மூன்றாம் நிலை கல்வித்துறை கல்விப்பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட

74476

OPEN UNIVERSITY OF SRI LANKA
LIBRARY

# ஆய்வுச் சுருக்கம்

பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை அமுல்படுத்தப்படல் வேண்டும் எனும் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கேற்ப வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் விளைதிறனை மேம்படுத்துவதன் மூலமாக மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் மிகச் சரியான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் இடம் பாடசாலையாகும். இதன் அடிப்படையிலேயே இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் விளைதிறனை மேம்படுத்தல் எனும் தலைப்பில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் ஆய்வானது மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் கோறளைப்பற்று மேற்கு கல்விக் கோட்டத்தின் 13 இடைநிலைப் பாடசாலைகளிலிருந்து எளிய எழுமாற்று முறை மற்றும் நோக்கம்சார் முறை ஆகிய மாதிரியெடுப்பு முறைகளில் தெரிவு செய்யப்பட்ட 145 ஆசிரியர்கள், 150 மாணவர்கள், அப்பாடசாலைகளின் 13 அதிபர்கள், கல்வி வலயத்தின் 4 அதிகாரிகள் ஆகியோரை ஆய்வு மாதிரிகளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலப்பு அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வின் குறிக்கோளுக்கேற்ப ஆய்வின் வினாக்களை அடைந்து கொள்ளும் வகையில் வினாக்கொத்துக்கள், நேர்காணல் அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு இம்மாதிரிகளிடமிருந்து பண்புசார் மற்றும் தொகைசார் தரவுகள் சேகரிக்கப்பட்டு புள்ளிவிபரவியல் முறையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன.

பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் விளைதிறன் வீழ்ச்சியடைந்த நிலையிலேயே செல்கின்றது. ஆசிரியர்களுக்கான பயிற்சி இன்மை, அதற்கான நேர ஒதுக்கீடு, நிதி ஒதுக்கீடு, வளப் பகிர்வு இன்மை, ஆசிரியர், மாணவர், பெற்றார் விழிப்புணர்வு போதாமை போன்ற காரணங்களினால் பாடசாலைகளில் இச்சேவையின் விளைதிறன் குறைவடைந்து சென்றுள்ளமையை இவ்வாய்வினால் கண்டறியப்பட்டுள்ளது. கல்வி அதிகாரிகள் மேற்பார்வையும் மதிப்பீடும் தொடராக நடைபெறுகின்ற போதும், ஆசிரியர்கள், மாணவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்வுகள், செயலமர்வுகள் நடத்தப்படும் போதும் இச்சேவையின் விளைதிறனை மேம்படுத்த முடியும் எனவும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இச்சேவையின் விளைதிறன் குறைவடைந்து செல்கின்றமையினால் பாடசாலைகளின் இடைநிலைப்பிரிவு கட்டிளமைப் பருவ மாணவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதுடன் அவர்களது சவால்களுக்கான மிகச் சரியான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு பாடசாலைகளில் இச்சேவையின் விளைதிறனை மேம்படுத்துவதன் மூலம் முடியும் எனவும் இவ்வாய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளது.



**முதன்மைச் சொற்கள்** - வழிகாட்டல் ஆலோசனை, விளைதிறன், மேம்படுத்தல், இடைநிலைப் பாடசாலைகள், சவால்கள்

# Abstract

Reference to the circular under the ministry of education that the guidance and counselling service should be implemented in the schools. The school is the place, where the students find the right solution to the various problems and challenges they face by improving the effectiveness of guidance and counselling service. In relation to this study has been conducted under the title of enhancing the effectiveness of guidance and counseling service in secondary schools.

Through using a simple random sampling and purposive sampling techniques, 13 principals of 13 secondary schools, 145 teachers, 150 students from the educational division of Koralai Pattu West and relavent 04 educational officers have been selected for this study. The study was employed mixed method. Questionnaire and interview schedule were used to collect data. Collected data has been analyzed using a statistic technique.

Although the guidance and counseling service has been implemented in the schools, it effectiveness carries on to decline. Based on the analysis of the data, it is found that the effectiveness of this service is declining, due to the lack of training for teachers, lack of time, financial resource allocations and lack of awareness among the teachers, the students and the parents. As the effectiveness of this service continues to decline, the schools adolescent students of secondary sections face a variety of challenges. Therefore, it has been recommended to improve this service to get the right solution for the students.

**Keywords**: guidance and counseling service, effectiveness, enhancing, secondary schools, challenges